1984 மார்ச் 22]

பெரம்பலூர் பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் :

399. (* வினா எண் 20067):—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் பேரூராட்சி பகுதிக்குக் குடி நீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : திருச்சி மாவட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப் படும் துறையூர் மற்றும் குறும்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பெரம்பலூர் பேரூராட்சியும் இடம் பெறுகிறது.

மம்சாபுரம் நகரப் பஞ்சாயத்திற்கான குடிநீர்த் திட்டம் :

400 (*வினா எண் 20608):—திரு. செ. சிவசாமி : மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா மம்சாபுரம் நகரப் பஞ்சாயத்திற்குக் குடிநீர் வசதி செய்துதரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) மம்சாபுரம் பேரூராட்சிக்கான பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தால் பரிசீலனை செய்யப்பட்டு அதற் கான குடிநீர் ஆதாரங்கள் சரியானதாக இல்லை என அறியப் பட்டது. எனவே, வேறு நிலையான குடிநீர் ஆதாரம் கிடைக் குமா என மறு ஆய்வு செய்யப்பட உள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மம்சா புரமானது 10,000 ஜனத்தொகை உள்ள ஒரு பெரிய நகர பஞ் சாயத்து. அதற்குப் பக்கத்திலே குடிநீர் ஆதாரம் இல்லையென்று சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 3 மைல்கள் தூரத்தில் அத்தி ஊத்து ஆற்றிலிருந்து ஏற்கெனவே 20 வருஷங்களாக ஸ்ரீவில்லிப் புத்தூர் டவுனுக்கு தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் நீர் ஆதாரம் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். எனவே, இந்த அத்திஊத்து ஆற்றிலிருந்து உடனடியாகத் தண்ணீரை எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய் யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.